# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 3

சுட்டெண்:........................................................ நேரம்: 90 மணித்துளிகள்

**1) தரப்பட்டுள்ள சொற்களில் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.**

**எ - கா**

இயல் இசை நாடகம், என்பது முத்தமிழ்

(முக்கனி, முப்பால், முத்தமிழ்)

1. தமிழருடைய வீரத்தைப் பற்றிக் கூறும் நூல் ________________.
(சிலப்பதிகாரம், புறநானூறு, திருக்குறள்)

2. கூத்துப் பாடல்கள் கேட்க ________________ இருக்கும்.
(இனிமையாக, வெறுப்பாக, கசப்பாக)

3. மரங்கள் பசுமையாகக் காட்சி அளிக்கும் காலம் ________________.
(பனிகாலம், கோடைகாலம், இலைஉதிர்காலம்)

4. சிறுமி ________________ என்று சிரித்தாள்.
(கலீர்கலீர், மளமள, கலகல)

5. நாய் குரைக்கும். அது போல் நரி ________________.
(ஊளையிடும், கனைக்கும், உறுமும்)

6. 50 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ________________ .
(அம்பது, ஐம்பது, ஐன்பது)

7. தகடூரை ஆண்ட மன்னன் ________________.
(பாரி, சேரமான், அதியமான்)

8. திருக்குறள் ________________ குறள்களைக் கொண்டது.
(1303, 1033, 1330)

9. மாதவி நேற்றுப் பாட்டுப் பாடினாள்.
நாளை பாட்டுப் ________________ .
(பாடுவாள், பாடுகிறாள், பாடினேன்)

10. நரிப்பாட்டியின் கை ________________ என்று இருந்தது.
(கரகர, சொரசொர, நறநற)

11. சிறு துளி பெரு ________________ .
(வெள்ளம், பள்ளம், வள்ளம்)

12. வீட்டுக்கு வந்த விருந்தினரை ________________ வரவேற்க வேண்டும்.
(சினத்துடன், அன்புடன், வெறுப்புடன்)

13. உண்மை என்ற சொல்லின் எதிர்ச்சொல் ________________.
(பொய், மெய், வாய்மை)

14. தைப்பொங்கல் என்ற சொல்லைப் பிரித்து எழுதினால் வருவது ________________ .
(தை + பொங்கல், தைப் + பொங்கல், தைத் + பொங்கல்)

15. அறநெறி நூல்களில் ஒன்று ______________ .
(சிலப்பதிகாரம், திருக்குறள், புறநானூறு)

16. அதியமான் ______________ நெல்லிக் கனியைக் கொடுத்தான்.
(கபிலருக்கு, திருவள்ளுவருக்கு, ஔவையாருக்கு)

17. நத்தார்விழாக் கொண்டாடப்படும் மாதம் ______________ .
(தை, மார்கழி, கார்த்திகை)

18. நண்பன் ______________ அஞ்சல் கிடைத்தது.
(எழுதிய, எளுதிய, எலுதிய)

19. நாம் பிறருடைய பொருளைக் கண்டு எடுத்தால் ______________ சேர்க்க வேண்டும்.
(மற்றவரிடம், உரியவரிடம், நண்பரிடம்)

20. ‘அடங்காப்பற்று’ என்று அழைப்பது ______________ .
(யாழ்ப்பாணத்தை , மன்னாரை, வன்னியை)

புள்ளிகள் 20

**2). கீறிட்ட இடங்களில் மிகப்பொருத்தமான சொற்களைத் தெரிந்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஓடிஓடி | மளமள | குடுகுடு | தாவித்தாவி | நறநற | ~~உயரஉயர~~ |

**எ - கா**

பட்டம் உயரஉயர ப் பறக்கும்.

1. குழலி வீட்டு வேலைகளை ____________ என்று செய்து முடித்தாள்.
2. குரங்கு மரத்துக்கு மரம் ____________ ப் பாய்ந்தது.
3. ஆதவன் பற்களை ____________ என்று கடித்தான்.
4. பாட்டி ____________ என்று நடந்து சென்றார்.
5. சிறுவன் ____________ விளையாடினான்.

புள்ளிகள் 05

**3). பார்த்து உறுப்பமைய எழுதுக.**

விருந்தோம்பல் ஒரு சிறந்த பண்பாகும்.

______________________________

விளையும் பயிரை முளையில் தெரியும்.

______________________________

புள்ளிகள் 05

**4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வரைந்த | பழுத்த | இருந்த | பாடிய | ~~இரக்க~~ | சிறந்த |

**எ - கா**

பாரி இரக்க குணம் உடையவன்.

1. பூனை சட்டியில் ______________ பாலைக் குடித்தது.
2. நன்கு ______________ பழங்கள் சுவையாக இருக்கும்.
3. வளவன் ______________ ஓவியம் அழகாக உள்ளது.
4. திருக்குறள் ஒரு ______________ அறநூல்.
5. எழிலி ______________ பாடல் நன்றாக இருந்தது.

புள்ளிகள் 05

**5) பொருத்தமான முடிக்கும் சொற்களை வைத்து, வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.**

**எ - கா**

கோடைகாலத்தில் மரங்கள் பசுமையாகக் காட்சியளிக்கும்.

1. சேரனால் மிருதங்கம் ______________ .
2. சங்கிலி மன்னன் யாழ்ப்பாணத்தை ______________ .
3. ஔவையார் அதியமானைக் காணச் ______________ .
4. இன்று மாமாவும் மாமியும் கனடாவிலிருந்து ______________ .
5. கலைகள் மகிழ்ச்சியைத் ______________ .

புள்ளிகள் 10

## 6). ஒழுங்குபடுத்தி எழுதுக.

எ - கா

எங்கள்/ தமிழே/உயிர் /

தமிழே எங்கள் உயிர்.

1. இருப்போம் / அன்பாய் / உயிர்களிடத்தில்

______________________________

2. முல்லைக்குத் / பாரி/ கொடுத்தான் / தேர்

______________________________

3. பாட்டியாக / ஏமாற்றியது / நடித்துச் / நரி / சிறுமியை

______________________________

4. விரும்பிச் / கடற்கரைக்கு / செல்வோம் / நாங்கள்

______________________________

5. தேடினான் / இனியன் / முகவரியைத் / பையினுள்

______________________________

புள்ளிகள் 10

7). கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | வை | ஆ | னி | தா | ஆ | கா |
| ல் | கா | டி | | ம | வ | ர் |
| லி | சி | த் | தி | ரை | ணி | த் |
| மா | | செ | வ் | வ | ந் | தி |
| ர் | றோ | கா | ர் | த் | தி | கை |
| க | சா | ம | ல் | லி | கை | ப் |
| ழி | பு | ர | ட் | டா | தி | பூ |

**மாதங்கள்** **பூக்கள்**

எ - கா ஆனி அல்லி

________________ ________________

________________ ________________

________________ ________________

________________ ________________

________________ ________________

புள்ளிகள் 10

**8) தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உணவில் | ~~நல்ல~~ | பெரியோரை | பழங்கள் | தூய்மையாக | குடிப்பாள் |

ஒளிநிலா மிகவும் நல்ல சிறுமி. அவளிடம் நல்ல பழக்கங்கள் உண்டு. அவள் எப்போதும் ________________ இருப்பாள். ஒளிநிலா ஒவ்வொரு நாளும் பால் ________________ . அவள் கீரை வகைகளையும் காய்கறிகளையும் ________________ சேர்த்துக் கொள்வாள். நாள் தோறும் ________________ உண்பாள். அவள் பல்துலக்கிய பின்னரே படுக்கைக்குச் செல்வாள். ஒளிநிலா ________________ மதித்து நடப்பாள். பிறருக்கு உதவி செய்யும் பண்பும் உடையவள்.

புள்ளிகள் 10

## 9) பந்தியைப் படித்து, வினாக்களுக்கு முழுவிடை எழுதுக.

வளவன் வீட்டில் ஒரு பூச்செடி வளர்த்தான். அதன் நிறம் பச்சை. அந்தச் செடியின் இலையில் ஒரு புழு இருந்தது. அது கொழு கொழு என்று இருந்தது. அந்தப் புழு மெதுவாக ஊர்ந்து போகும். ஒவ்வொரு நாளும் அதைப் பார்ப்பான். ஒரு நாள் அந்தப் புழுவைக் காணவில்லை. வளவன் செடியில் அதைத் தேடினான். ஆனால் ஓர் இலையில் பழுப்பு நிறத்தில் ஒரு கூடு இருந்தது. அவன் அதை வியப்போடு பார்த்தான். சில நாட்களின் பின்பு அந்தக் கூடு உடைந்து ஒரு பூச்சி வெளியே வந்தது. அது ஓர் அழகான வண்ணத்துப்பூச்சி. அதைப் பார்த்து வளவன் மகிழ்ந்தான்.

**எ - கா**

செடியின் இலையில் என்ன இருந்தது?

செடியின் இலையில் ஒரு புழு இருந்தது

---

1. வளவன் வீட்டில் எதை வளர்த்தான்?

---

2. புழு எப்படி இருந்தது?

---

3. புழு எப்படி ஊர்ந்து போகும்?

---

4. கூடு என்ன நிறத்தில் இருந்தது?

---

5. கூட்டில் இருந்து வெளியே வந்த பூச்சி எது?

---

| புள்ளிகள் 10 |
|---|

10. படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15